Naming the Space

நினைவேந்தல் திடல், **‘தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் முற்றம் முள்ளிவாய்க்கால்’** எனப் பெயரிடப்பட்டுள்ளது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பினர், மே 18 நினைவேந்தலை முன்னிறுத்தியும், நினைவேந்தலை நிறுவனமயப்படுத்தும் பொருட்டும் மேற்படி முயற்சியினை மேற்கொண்டுள்ளனர். பெயர் பொறிக்கப்பட்ட கல்லில், முள்ளிவாய்க்கால் பத்தாம் ஆண்டு நினைவுப் பிரகடன கோரிக்கைகளும் செதுக்கப்பட்டுள்ளன. அத்துடன் முள்ளிவாய்க்காலில் உள்ள இனப்படுகொலையை பிரதிபலிக்கும் சிலையும், இனப்படுகொலையின் பொதுப்படிமமாக செதுக்கப்பட்டுள்ளது.

2009 லிருந்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இராணுவ கெடுபிடிகளுக்கு மத்தியில் ஒழுங்கமைக்கப்பட்டு வருவதை எல்லாரும் அறிவர். போரில் கொல்லப்பட்டவர்களை நினைவு கூர்வது பாதிக்கப்பட்ட மக்களின் உரிமை. நினைவுகூரல் நிறுவனமயப்படுத்தப்படுவதை ஒருபோதும் சிங்கள-பௌத்த அரசு விரும்ப்பப்போவதுமில்லை அதற்க அனுமதியளிக்கப் போவதுமில்லை. இனப்படுகொலையின் சாட்சியங்கள் எப்பபோதுமே அரச இனப்படுகொலை மறுப்பை கேள்விக்குட்படுத்துகின்றன. உரிமைகளுக்காய் போராடிய தமிழினம் நினைவுகூரும் இடத்திற்காய் போராடவும் வலிந்து தள்ளப்பட்டுள்ளது. கொத்துக் கொத்தாய் கொல்லப்பட்ட சொந்தங்களின் கல்லறைகள் இல்லாத நிலையிலும், கூட்டாய் நினைகூர கல்லறை வெளியை அரசு தரத் தயாராக இல்லாத நிலையில் தமிழர்கள் நினைகூரலை அடக்குமுறைக்கெதிரான உத்தியாக பாவிக்க திணிக்கப்பட்டுள்ளனர்.

தமிழர்களின் அரசியல் கோரிக்கைகளை நீர்த்துப் போவதற்குரிய செயற்திட்டத்தை அரசு தொடர்ந்து முன்னெடுத்துக் கொண்டு வருகின்றது. இரண்டு நாட்களுக்கு முன்னரும் குருந்தூர் மலையில் விகாரை கட்டும் முயற்சிகளை இராணுவத்தின் அனுசரனையுடன் மேற்கொண்டதும் குறிப்பிடப்பட வேண்டியுள்ளது.